தமிழ்நாடு சட்டப் பேரவை

திருவள்ளுவர் ஆண்டு 2041 – சித்திரை 24
2010 மே 7, வெள்ளிக்கிழமை

சென்னை, ஓமந்தூரார் அரசினர் தோட்டம், புதிய சட்டப் பேரவை-தலைமைச் செயலக வளாகத்தில் உள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. இரா. ஆவுடையப்பன்** *அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"பிணியின்மை செல்வம் விளைவின்பம் ஏமம்
அணியென்ப நாட்டிற்கிவ் வைந்து."

மக்களுக்கு நோயற்ற வாழ்வு, விளைச்சல் மிகுதி, பொருளாதார வளம், இன்ப நிலை, உரிய பாதுகாப்பு ஆகிய ஐந்தும் ஒரு நாட்டுக்கு அழகு எனக் கூறப்படுபவைகளாகும்.

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

1. தகவல் கோரல்

(அ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

திரு. சி. ஞானசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உட்காருங்கள். திரு. ஓ. பன்னீர்செல்வம், சொல்லுங்கள். (குறுக்கீடு)*

(ஆ) கோவையில் ம.தி.மு.க. தொழிற்சங்கப் பிரமுகர்கள் கைது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *டாக்டர் தி. சதன் திருமலைக்குமார், சொல்லுங்கள்.*

டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவையில் 3-5-2010 ஆம் தேதியன்று*

[டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்] [2010 மே 7 மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் தொழிற்சங்கப் பிரமுகர்கள் எங்கள் அலுவலகத்தில் கூடியிருக்கும்போது, காவல் துறையால் கைது செய்யப்பட்டு, ஒரு திருமண மண்டபத்தில் அடைத்து வைக்கப்பட்டு, இரவில். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள், கோயம்புத்தூரிலுள்ள உங்கள் தொழிற்சங்கக் கட்டடத்தைப் பற்றித்தானே பேசுகிறீர்கள்? (குறுக்கீடு) சொல்கிறேன், கேளுங்கள். இன்றைக்குக் காவல் துறை குறித்த மானியக் கோரிக்கை எடுக்கப்பட இருக்கிறது. அதுசம்பந்தமாக இந்தத் துறைமீதான விவாதத்திலேயே நீங்கள் பேசலாம். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நான்தான் சொல்லிவிட்டேன் இல்லையா? காவல் துறை குறித்த மானியக் கோரிக்கை மீதான விவாதத்திலேயே பேசலாம் என்று சொல்லிவிட்டேனே? (குறுக்கீடுகள்) நேரத்தின் அருமை கருதி இதைச் சொல்கிறேன். அந்தத் துறைபற்றிப் பேசும்போது நீங்கள் இதைக் குறிப்பிட்டுப் பேசலாம். காவல் துறை மானியக் கோரிக்கைதான் இன்றைக்கு எடுக்கப்படவிருக்கிறது. அந்த மானியக் கோரிக்கையைத்தான் இன்றைக்கு எடுக்கப் போகிறோம். அதனால் அதிலே பேசலாம் என்பதால் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) சரி, சொல்லுங்கள். அமைச்சர் பதில் சொல்லத் தயாராக இருக்கிறாரா? (குறுக்கீடு) சரி, டாக்டர் தி. சதன் திருமலைக்குமார், சொல்லுங்கள். (குறுக்கீடு) நீங்கள் இந்த சப்ஜெக்ட்டை மீண்டும் மானியக் கோரிக்கையின்போது பேசாதீர்கள்.

டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவையில் எங்கள் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தொழிற்சங்கப் பிரமுகர்களை எங்கள் அலுவலகத்திலிருக்கும்போதே காவல் துறையினர் கைது செய்து, அங்கே ஒரு திருமண மண்டபத்தில் அடைத்து வைத்து, இரவு 8 மணியளவில் விடுதலை செய்திருக்கின்றார்கள். இதை எதற்காகச் செய்தார்கள் என்பது எங்களுக்குத் தெரியவில்லை. இதற்குக் கட்டளையிட்டது யார், எப்படி நடந்தது, ஏன் நடந்தது என்பதை அவையில் விளக்க வேண்டுமெனக் கேட்டு, அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

2010 மே 7]

மாண்புமிகு திரு. துரைமுருகன்: பேரவைத் தலைவர் அவர்களே, சுருக்கமாகவே நான் சொல்லிவிடுகிறேன். *12-4-2010* அன்று M.L.F. சங்கத்தினர் சார்பாக கோவை மாவட்ட நீதிமன்றத்தில் இடைக்காலத் தடை கோரி மனு தாக்கல் செய்து L.P.F. சங்கத்தினர்மீது இடைக்கால உறுத்துக்கட்டளை பெற்றனர். ஆனால், கோவை மாவட்ட நீதிமன்றம் L.P.F. சங்கத்தினரை சங்கக் கட்டடத்திலிருந்து வெளியேறுமாறோ அல்லது காவல் துறைக்கு M.L.F. சங்கத்தினரை வெளியேற்றுமாறோ எந்த உத்தரவும் பிறப்பிக்கவில்லை. இதையடுத்து, L.P.F. சங்கத்தினர் சென்னை உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து *6-5-2010* அன்று status quo உத்தரவைப் பெற்றுள்ளனர். எனவே, காவல் துறையினர் இந்தப் பிரச்சினையில் அத்துமீறிச் செயல்பட்டனர் என்ற குற்றச்சாட்டு உண்மையல்ல. காவல் துறையினர் ஆரம்பத்திலேயே இப்பிரச்சினையை கோட்டாட்சியர் விசாரணைக்கு அனுப்பி நடுநிலையாகவே செயல்பட்டனர். L.P.F. சங்கத்தினர் உயர் நீதிமன்றத்தில் கோட்டாட்சியர் விசாரணைக்குத் தடையாணை பெற்ற பின்னரே சங்கக் கட்டடத்தைத் தங்கள் பொறுப்பில் ஏற்றுக்கொண்டனர். மேலும், இதுகுறித்து ம.தி.மு.க. பொதுச் செயலாளர் அவர்கள் *15-4-2010* அன்று நடத்திய உண்ணாவிரதத்திற்கு அனுமதி அளித்தோம். பிறகு *3-5-2010* அன்று, M.L.F. சங்கத்தினர் காவல் துறையினர் முன் அனுமதியின்றி, சங்கக் கட்டடத்தைக் கைப்பற்றும் நோக்குடன் ஊர்வலமாகச் செல்ல முற்பட்டபோது, காவல் துறையினர் சட்டம்-ஒழுங்குப் பிரச்சினையைத் தவிர்ப்பதற்காக முன்னெச்சரிக்கையாக நடவடிக்கை எடுத்து அவர்களைக் கைது செய்து, பிறகு விட்டுவிட்டார்கள். எனவே, இதில் போலீஸ் அத்துமீறல் எதுவும் கிடையாது.

முற்பகல் 9-35

(இ) தேசிய நெடுஞ்சாலைகளில் உள்ள சுங்கச் சாவடிகளில் அதிகக் கட்டணம் வசூலிப்பது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ். *(குறுக்கீடுகள்)* உட்காருங்கள். ஒரே நேரத்திலே எல்லோரும் பேசினால் நன்றாகவா இருக்கும்? உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)*